LOLC
பினான்ஸ்

Consumer Business Centre, இல.448, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05, இலங்கை.
வாடிக்கையாளர் சேவை: +94 115718888 வலைத்தளம்: www.lolcfinance.com
மின்னஞ்சல் முகவரி: cards@lolcfinance.com

Advertisement

LOLC பினான்ஸ் கடன் அட்டை விபரக்கூற்று
2016 நவ. 08 முதல் 2016 டிசெ. 07 வரைக்கான விபரக்கூற்று

## கணக்குச் சுருக்கம்

| ஆரம்ப மீதி | +கொள்வனவுகள் மற்றும் ஏனைய பற்றுக்கள் | +ரொக்க முற்பணம் | - கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வரவுகள் | முடிவு மீதி |
|---|---|---|---|---|
| | | | | |

| | | | |
|---|---|---|---|
| அட்டை இலக்கம் | | கொடுப்பனவு செலுத்த வேண்டிய திகதி | |
| கடன் உச்சவரம்பு | | முன்னைய நிலுவைத் தொகை | |
| பண உச்சவரம்பு | | செலுத்த வேண்டிய குறைந்தபட்ச கொடுப்பனவு | |
| ஆண்டு வட்டி விகிதம் | | | |

## கொடுக்கல் வாங்கல் விபரங்கள்

| குறிப்பிட்ட திகதி | கொடுக்கல் வாங்கல் திகதி | விபரம் | நாணயம் | தொகை | தொகை (இ.ரூ,) |
|---|---|---|---|---|---|

-விபரக்கூற்றின் முடிவு-

..........இவ்விடத்தில் பிரித்து இப்பகுதியை உங்கள் கொடுப்பனவுடன் சமர்ப்பிக்கவும்..........

பெயர்:

முகவரி:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அட்டை இலக்கம் | | | | | | |
| செலுத்திய தொகை | | காசோலை | | பணம் | | |
| எழுத்தில் தொகை | | | | | | |
| காசோலை இலக்கம் | | வங்கி | | கிளை | | |
| திகதி | தி தி மா மா வ வ வ வ | | | | | |

குறைந்தபட்ச கொடுப்பனவு மட்டும் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரம் மறுபக்கத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வட்டி அட்டுறுவாக காட்டப்படும்.
உரியதிகதியில் அல்லது அதற்கு முன்னர் முழுக்கொடுப்பனவும் செலுத்தப்பட்டால் மாத்திரம் வட்டி அற்றநாட்கள் பிரயோகிக்கப்படும். ரொக்க முற்பணத்திற்கு இது பொருந்தாது.

# உங்கள் கடன் அட்டை விபரக்கூற்று பற்றிய முக்கிய தகவல்கள்

## 1) உங்கள் கடன் அட்டை பில்களைச் செலுத்துதல்

உங்கள் கடனட்டை பில்களை செலுத்த தயவு செய்து பின்வரும் ஏதேனுமொரு தெரிவுகளை பயன்படுத்தவும்

a) **பண மூலமான கொடுப்பனவு**
எந்தவொரு LOLC கிளையிலும் பணக் கொடுப்பனவுகளைச் செய்யலாம். தயவுசெய்து பணத்தைத் தபாலில் அனுப்ப வேண்டாம். சனிக்கிழமைகளில் செய்யப்படும் கொடுப்பனவுகள் அடுத்த வேலை நாளிலேயே வரவு வைக்கப்படும்.

b) **நிலையான அறிவுறுத்தல்கள்**
நீங்கள் LOLC பினான்ஸ் பி.எல்.சி. கணக்கு வைத்திருக்கும் ஒருவரென்றால், உங்கள் கடன் அட்டை பில்லை தீர்ப்பனவு செய்வதற்கு உங்கள் சேமிப்புக் கணக்கில் பற்று வைக்கும்படி நிலையான அறிவுறுத்தலை விடுக்க முடியும். விபரக்கூற்று மீதியில் 4% க்கும் 100% க்கும் இடையிலான ஒரு தொகையை உரியகொடுப்பனவுத்திகதியில் பற்றுவைக்கும்படி நீங்கள் கேட்கலாம்.

c) **CEFTS ஊடான கொடுப்பனவு**
அட்டை வைத்திருப்பவர் CEFTS ஊடாக ஏனைய வங்கிகளின் சேமிப்பு/நடைமுறை கணக்குகளிலிருந்து தனது கடன் அட்டைக் கணக்கிற்குப் பணத்தை மாற்றிக்கொள்ள முடியும்.

d) **LOLC REAL TIME**
LOLC REAL TIME வசதியின் மூலம் உங்கள் LOLC பினான்ஸ் சேமிப்புக் கணக்கிலிருந்து உங்கள் கடன் அட்டைக் கணக்கிற்குப் பணத்தை மாற்ற முடியும். இதற்குக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

e) **iPay**
LOLC Finance PLC இல் உங்கள் சேமிப்பு கணக்கு மற்றும் உங்களின் மற்ற வங்கிக் கணக்குகளையும் iPay உடன் இணைத்து உடனடியாக ஆன்லைனில் பணம் செலுத்துவதற்கான வசதியைப் பெறலாம்.

f) **mCash**
தீவு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட mCash தொடு புள்ளிகளில் இருந்து கிரெடிட் கார்டு பணம் செலுத்தலாம்.

g) **காசோலை மூலமான கொடுப்பனவு**
காசோலைகள் (A/C payee only) என்று குறுக்குக்கோடு இடப்பட்டு, அட்டை இலக்கமும் குறிப்பிடப்பட வேண்டும். உதா: Pay LOLC Finance PLC, O/A card no XXXX XXXX XXXX XXXX. அட்டை வைத்திருப்பவரின் பெயருக்கு வரையப்பட்ட மூன்றாம் தரப்புக் காசோலைகள், மேலுள்ள உதாரணத்திலுள்ளது போல வரையப்படாவிட்டால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. காசோலை தேறிய பின்பே கடன் அட்டைக்கணக்கில் பணம் வரவுவைக்கப்படும். காசோலைகளைச் செயற்படுத்தி அங்கீகரிக்க குறைந்தபட்சம் மூன்று தினங்களும் கூடியபட்சம் ஆறு தினங்களும் அவகாசம் தேவை. பணக் காசோலைகளும் பின்திகதியிடப்பட்ட காசோலைகளும் கொடுப்பனவுகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. தபால் மூலம் காசோலை கொடுப்பனவு அனுப்பப்பட்டால், கொடுப்பனவு உங்கள் கணக்கில் சேர்க்கப்படுவதற்கு ஆகக்கூடியதாக ஒன்பது நாட்கள் அவகாசம் அளிக்கவும். சகல தபால் மூலமான காசோலைகளும் முகாமையாளர் - "கடன் அட்டைச் செயற்பாடுகள், இல. 438, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

## 2) செலுத்த வேண்டிய குறைந்தபட்ச கொடுப்பனவு

மொத்தக் குறைந்தபட்ச கொடுப்பனவுத் தொகை பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

a) மொத்த நிலுவையில் 4% அல்லது ரூ.100/- என்பவற்றில் எது கூடியதோ, அத் தொகை.
b) கடன் அட்டையின் கடன் உச்சவரப்பிற்கு மேன்மிகுதியாகச் செலுத்தப்பட வேண்டிய தொகை.
c) முன்னைய மாதத்தில் (மாதங்களில்) செலுத்தப்படாத/ நிலுவையாகவுள்ள ஏதேனும் குறைந்தபட்ச கொடுப்பனவுத் தொகை.
d) நிலையான மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகள் (சமப்படுத்திய மாதாந்தத் தவணைப்பணம்). அல்லது
e) LOLC பினான்ஸ் பி.எல்.சி.யினால் குறித்துரைக்கப்படும் தொகை.

## 3) கொடுப்பனவு செலுத்த வேண்டிய திகதி

விபரக்கூற்றின் முன்பக்கத்தில் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச தொகை இத் திகதியில் செலுத்தப்பட வேண்டும். கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியில் உங்கள் கொடுப்பனவு கிடைக்காவிட்டால் அல்லது குறைந்தபட்ச கொடுப்பனவுத் தொகை செலுத்தப்படாவிட்டால், உங்கள் அட்டைக்கணக்கில் தாமதக்கொடுப்பனவுக்கட்டணம் அறவிடப்படும்.

## 4) தாமதக் கொடுப்பனவுக் கட்டணம்

குறைந்தபட்ச கொடுப்பனவு உரிய திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்காவிட்டால், பின்வரும் வீதங்களில் தாமதக்கட்டணம் உங்கள் அட்டைக்கணக்கில் அறவிடப்படும்.

மாஸ்டர் கார்ட் பல்ஸ் கிரெடிட் அட்டை – ரூ. 750/-
மாஸ்டர் கார்ட் கோல்ட் கிரெடிட் அட்டை – ரூ. 750/-
மாஸ்டர் கார்ட் பிளட்டினம் கிரெடிட் அட்டை – ரூ. 1,000/-
மாஸ்டர் கார்ட் வேர்ல்ட் கிரெடிட் அட்டை – ரூ. 1,500/-

## 5) உச்சவரம்பு மீறல் கட்டணம்

விபரக்கூற்றுச் சுற்றுவட்டத்தினுள் எந்த நேரத்திலாவது கடன் அட்டை உச்சவரம்பு மீறப்படுமாயின், பின்வரும் வீதங்களில் உச்சவரம்புமீறல் கட்டணம் உங்கள் அட்டைக்கணக்கில் அறவிடப்படும்.

மாஸ்டர் கார்ட் பல்ஸ் கிரெடிட் அட்டை – ரூ. 750/-
மாஸ்டர் கார்ட் கோல்ட் கிரெடிட் அட்டை – ரூ. 750/-
மாஸ்டர் கார்ட் பிளட்டினம் கிரெடிட் அட்டை – ரூ. 1,500/-
மாஸ்டர் கார்ட் வேர்ல்ட் கிரெடிட் அட்டை – ரூ. 2,000/-

## 6) ரொக்க முற்பணக் கட்டணம்

கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் 6% அல்லது குறைந்தபட்சக் கட்டணமாகிய ரூ.500/- என்பவற்றில் எது கூடியதோ, அத் தொகை என்ற அடிப்படையில் ரொக்க முற்பணக் கட்டணம் கணிக்கப்படும்.

## 7) நிதி அறவீடுகள்

மொத்த நடப்பு மீதி உரிய கொடுப்பனவுத் திகதியில் அல்லது அதற்கு முன் செலுத்தப்பட்டால் (ரொக்க முற்பணங்கள் தவிர்ந்த) கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதி அறவீடுகள் எதுவும் விதிக்கப்பட மாட்டாது. உரிய கொடுப்பனவுத் திகதியில் பகுதிக் கொடுப்பனவு மட்டும் மேற்கொள்ளப்பட்டால் அல்லது கொடுப்பனவு மேற்கொள்ளப்படாவிட்டால் அல்லது உரிய கொடுப்பனவுத் திகதிக்குப் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டால், முழுத் தொகையும் செலுத்தி முடிக்கப்படும் வரை புதிய கொள்வனவுகள் உள்ளடங்கலாக முன்னைய விபரக்கூற்று மீதிக்கு நிதி அறவீடொன்று விதிக்கப்படும். இந்த அறவீடு தினசரி மீதி அடிப்படையில் LOLC பினான்ஸ் பி.எல்.சி.யின் நடப்பிலுள்ள மாதாந்த வட்டி வீதத்திற்கு அமைவாகக் கணிக்கப்படும்.

### வட்டி கணிப்பீட்டு உதாரணம்

விபரக்கூற்றுத் திகதி 2019/06/01 கொடுப்பனவுக்குரிய திகதி 2019/06/16

| திகதி | விபரம் | கொ.வா.தொ. | மீதி |
|---|---|---|---|
| 02/06/2019 | ஆரம்ப மீதி | | 10,000 |
| 10/06/2019 | கொள்வனவு | 1,000 | 11,000 |
| 16/06/2019 | கொடுப்பனவு | -3,000 | 8,000 |
| 01/07/2019 | காலத்திற்கான வட்டி* | 225.21 | |
| 01/07/2019 | முடிவு மீதி | | 8,225.21 |

| வட்டி கணிப்பீடு | | | | |
|---|---|---|---|---|
| *திகதி வரம்பு | மீதி | *வீதம் | நாட்கள் | தற்காலிக வட்டித் தொகை |
| 02/06/2019 - 09/06/2019 | 10,000 | 30% | 8 | 65.75 |
| 10/06/2019 - 15/06/2019 | 11,000 | 30% | 6 | 54.25 |
| 16/06/2019 - 01/07/2019 | 8,000 | 30% | 16 | 105.21 |
| மொத்தம் | | | | 225.21 |

*இது ஒரு அடையாள விகிதம் மட்டுமே

## 8) தொலைந்த அட்டைக்கான பொறுப்பு

அட்டையின் தொலைவு பற்றி LOLC பினான்ஸ் பி.எல்.சி. அட்டை நிலையத்திற்கு அறிவிக்கப்படுவதற்கு முன் இடம்பெற்ற சகல அட்டைக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் (அவை அதிகாரமளிக்கப்பட்டவையாகவோ அல்லாமலோ இருக்கலாம்) அட்டை வைத்திருப்பவரே பொறுப்பாளியாவார்.

## 9) வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் பட்டியலிடலுக்கான பரிவர்த்தனை வீதங்கள்

சகல வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களும் மாஸ்டர்கார்ட் பரிவர்த்தனை வீதங்களைப் பயன்படுத்தி மாற்றப்படும். உள்நாட்டு பரிவர்த்தனை வீத ஏற்றத்தாழ்வுகளின் தாக்கத்தைக் குறைப்பதற்காக பட்டியலிடும் வேளையில் ஒரு மேலதிக தொகை (3.5% வரை) இந்த வீதத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும்.